# இரட்டைப் பன்மை குறிப்புச்சொற்களும் கள் விகுதியும்

மோகன தாஸ் ராமசாமி
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்

## 1.0 அறிமுகம்

வளரும் மொழிகளுக்கெல்லாம் அடையாளக் குறியீடாக அமைவது மாற்றம்தான். புறவுலகில் நடைபெறும் பரிணாம மாற்றங்கள் எப்படிப் புதியதொரு மாற்றத்தினால் பழமையாக்கி விடுகிறேதா அது போலவே மொழியுலகில் ஏற்படக்கூடிய மாற்றங்களும் என்றென்றும் புதிதாகவே நின்று நிலைபெறுவதில்லை. நெடுங்காலப் பயணத்தில் மொழி தன்னகத்தே பெற்றுக் கொண்ட புதிய பரிணாம உறுப்புகள் பல. அதே வேளையில் *பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே* என்னும் முதுமொழிக்கேற்ப சமுதாயத்தினரால் ஒதுக்கித் தள்ளப்பட்ட சில மொழிக்கூறுகளைக் காலத்தின் தேவையைக் கருதிக் புறந்தள்ளியும் உத்வேகமிக்க வல்லமைச் சொற்களாக உருமாறும் புதுச்சொற்கள் கூட புதியவை என்ற நிலையை மிகக் குறுகிய காலத்தில் பெற்றுவிடுவதில்லை. அந்நிலையைப் பெற்றுவிட்டுத் தனக்கெனதொரு பயன்பாட்டுடன் செயல்படுவதுதான் இரட்டைப் பன்மைச் சொற்கள். தமிழ் மொழியின் ஊடே நிலைத்திருக்கும் இவ்வரிய பண்பு இதனைப் பண்பட்ட மொழிக் கூறாக உருவாக்கம் செய்துள்ளது.

புதுமையை வரவேற்றும் பழையனவற்றைப் புறந்தள்ளும் அதே காலக்கட்டத்தில் காலத்தால் நிலைபெற்ற பழமைக்கூறுகளை ஒட்டுமொத்தமாகப் கலையாது பல நற்கூறுகளைத் தன்னகத்தே நிலைநிறுத்திக் கொண்டும் பழமையில் பிறந்தாலும் காலத்தால் மாறாத்தன்மையோடும் புத்தொலிவோடும் செயல்பட வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான சொற்களை உருவாக்கிக் கொண்டு வளர்ந்துவரும் மொழியாக வாழ்வு பெற்றது தமிழ்மொழி. அவை பலவகைகளாகப் பிரிக்கப்படலாம். ஒரு மொழியில் காணப்படும் சொற்பகுப்பு முறைமையைப் பற்றிக் குறிப்பிடும் போது பொற்கோ பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஒரு மொழியில் உள்ள சொற்கள் அவற்றின் இலக்கணச் செயற்பாட்டுக்கு ஏற்ப பெயர், வினை, பெயரடை, வினையடை, ஒட்டு என வகைப்படுத்தலாம். இப்படி அமையும் சொல்வகையினை இலக்கணக் கூறுகள் என்றும் குறிப்பிடுவதுண்டு. மொழிக்கு மொழி இந்தச் சொல் வகைப்பாட்டின் எண்ணிக்கை வேறுபடக் கூடும் (1997: 75)

அவரது கருத்தின்படி தமிழ்மொழியில் வழங்கப்படும் பல்லாயிரக்கணக்கான சொற்களைத் தனித்துநின்று பொருள் கொடுக்கக்கூடியவற்றைப் பெயர் என்றும் வினை என்றும் இரண்டு பெரும் குழுக்களில் அடக்கிவிடலாம். இவ்விருவகைச் சொற்களைச் சார்ந்து பொருள் கொடுக்கும் சொற்களை உரிச்சொற்கள் என்றும், இடைச்சொற்கள் என்றும், தமிழ் இலக்கணம் வகைப்படுத்திக் கூறுகிறது. இவற்றுள் முன்னர்க் குறிப்பிட்ட இருவகைச் சொற்களுள் பெயர்ச்சொற்கள் தாம் ஒரு மொழிக்கு மிகுந்த சிறப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்தவை என்று கருதுவாரும் உள்ளனர்.[2] எனினும், *எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே*[3] என்னும் தொல்காப்பியரின் சூத்திரத்தைக் உற்றுநோக்கும் போது ஒரு மொழியைப் பொறுத்தமட்டிலும் அவற்றுள் காணப்படும் எல்லாச் சொற்களுமே முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்திருக்கின்றன என்றால் மிகையாகா. வெறுமனே ஒரு குழுவைச் சார்ந்த சொற்களை மட்டுமே மூலாதாரமாகக் கொண்டு ஒரு மொழி செயல்பட முடியாது. பெயர்ச்சொற்கள் சில விகுதிகளோடு இணைந்து பன்மையைக் குறிக்கும். சில வேளைகளில் அவை இரட்டைப் பன்மைத் தன்மையையும் வெளிப்படுத்திக் காட்டும். அவ்வகைச் சொற்களைப் பற்றியே இக்கட்டுரை ஆராய்கிறது.

## 1.2 ஆய்வுச் சிக்கல்

இன்றைய வழக்கில் பன்மையைக் குறிக்க, உயர்திணையிலும் அஃறிணையிலும் *கள்* விகுதி இணைக்கப்படுவது வழக்கமான இயல்பாகிவிட்டது. பண்டைத் தமிழில் இதன் பயன்பாடு வரையறைக்குட்பட்டே இருந்தது. ஆனால், இற்றைத் தமிழில் உயர்திணைப் பெயர்களில் இதன் பயன்பாடு கணிசமாக இருந்தாலும், அஃறிணைப் பெயர்களிலும் இதன் தாக்கம் விரிவாகவே அமைந்துள்ளது.

எ. கா.

| | |
|---|---|
| உயர்திணை | அஃறிணை |
| தோழியர்கள் | அவைகள் |
| தேசத்தார்கள் | மூன்று பெட்டிகள் |
| இளைஞர்கள் | பத்து மீன்கள் |
| தாய்மார்கள் | பத்து கரடிகள் |

இவ்வாறு அர், ஆர். மார், போன்ற பன்மை விகுதிகளை ஏற்ற சொற்களுக்கு மற்றொறு பன்மை விகுதியான கள் இணைக்கப்படும் போது அவை இரட்டைப் பன்மை என்னும் தகுதியைப் பெறுகின்றன.

இத்தகைய பயன்பாடு இன்றைய மொழிநடையில் ஆழப்பதிந்து விட்டிருக்கிறது. இத்தகைய பன்மைத் தன்மையை முன்னிருத்திப் பேசும் போக்கு சரியா தவறா என்று நிர்ணயிப்பது சற்றுக் கடிமான செயலே. ஆயினும் *வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலிய பொருளும் நாடி*[4] இலக்கணம் காணப்பட்டதன் அடிப்படையில் காணும் போது இம்மாறுபாட்டினை ஏற்றாக வேண்டும் என்பது மட்டும் திண்ணம். எனினும், மொழி நடைக்கும், சில வேளைகளில் கருத்து நுண்மைக்கும் மாறுபட்ட பொருண்மையைக் கொடுக்கும் சூழல் இருப்பதால் இயன்றளவு இதன் பொருருளுணர்ந்து பன்படுத்துவது நன்று. அத்தகைய குறைநிறைகளைச் சுட்டிக்காட்டுவது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## 1.3 பெயர்ச்சொற்களும் பன்மைச் சுட்டுதலும்

நம் கண்முன்னுள்ள பொருட்களை எண்ணிக்கையிடுவதற்கு எண்களைப் பயன்படுத்தி வகுத்துக் காட்டுவது எல்லா மொழிகளிலும் காணப்படும் பொதுமையான வழக்கம். இவ்வகைப் பெயர்களை எண்ணுப்பெயர்கள் என்றும் பெயரிடுவர். புறவுலகில் காணப்படும் பருப்பொருட்களை எண்ணிக்கைக்குட்படுத்த எல்லா மொழிகளும் தனக்கென உகந்ததொரு செயல்முறை பயிற்சியைக் கையாண்டு வருகின்றன. தன் கண்முன்னுள்ள பொருட்களை எண்ணிக்கையிடுவதற்கு எண்களைப் பயன்படுத்தும் முறைமையும் பொதுமையானது. வழக்கமானது, பழமையானது கூட எனலாம். இதற்கு அப்பாற்பட்டுச் சில மொழிகள் விகுதிகளையும் குறிப்பிட்ட பதிலீட்டுச் சொற்களையும் (அதிகம், சிறிது, ரொம்ப, கொஞ்சம், சில, பல) பயன்படுத்துகின்றன. சில மொழிகளில் இப்பண்பு இலகுவானதாகவும் வேறு சில மொழிகளில் சற்றுச் சிரமமான விதிகளைக் கொண்டிலங்குவதையும் காண முடிகிறது. குறிப்பாக சீனம், ஜப்பானியம் போன்ற சீனோ– திபெத்திய மொழிகளிலும், இந்தோனேசியம் மலாய், போன்ற ஆஸ்ட்ரோ போலினேஸிய மொழிகளில் பன்மை சுட்டும் பண்பு எளிதாகவும் சிக்கல்கள் குறைந்தாகவும் அமைந்துள்ளன.

தமிழ்மொழியைப் பொறுத்தமட்டிலும் பெயர்ச்சொற்களைச் சார்ந்த பகுப்பு மிகவும் சிறப்பானதாக மட்டுமல்லாது விரிவானதாகவும் தெளிவானதாகவும் அமைந்திருக்கிறது. பெயர்ச்சொற்களின் பகுப்பு முறையை விளக்கிய பிறகு,[4] அவற்றின் இலக்கணம் பகரப்படும் போதே அவை உயர்திணை என்றும் அஃறிணை என்றும் பகுக்கப்பட்ட நிலையிலேயே துள்ளியமான விளக்கங்களை மரபிலக்கண நூல்கள் வழங்கிப் போகின்றன. சொற்களை அறிமுகம் செய்யும்போது பெயர்சொல்லுக்கே முக்கியத்துவம் வழங்கி,

பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்னவுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே

(தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூற்பா 160)

என்று பெயர்ச்சொற்களின் பகுப்பு முறைமையும் தெள்ளத் தெளிவாக விவரிக்கிறார்.[5] பெயர்ச்சொற்களின் பகுப்பில் தொல்காப்பியர் திணைப் பகுப்பிற்கே முன்னுரிமை வழங்கிக் கூறியிருப்பது, இம்மொழி கலைக்கலாச்சாரத்தையும் மரியாதை வெளிப்பாட்டுச் சிந்தனையையும் போற்றிப் பாதுகாக்கும் பாங்கினைத் தெளிவுபடுத்துகிறது.

பொதுவாக எல்லா மரபிலக்கண நூல்களும் பெயர்ச்சொற்களுக்கு மிகவும் சிறந்த விரிவான இலக்கணத்தை முன்வைக்கின்றன. பெயர்ச்சொற்கள் சார்ந்த ஒவ்வொரு துறையையும் துப்புத்துலக்கி அவை விரிவாக விவரித்துக் காட்டுகின்றன. குறிப்பாக, சொல்லிலக்கணம் பெயர்ச்சொல் என்ன திணை, இடம், என்ன பால், என்ன எண் என்பதனை விவரித்துக் கூறுகிறது. இதனைப் பற்றிக் கருத்துரைக்கையில் க. திலகவதி "இந்தச் செய்தி சொல்லளவில் மட்டும் முக்கியத்துவம் பெறும் ஒன்றல்ல. வாக்கியத்தில், எழுவாய்க்கும் பயனிலைக்குமிடையே திணை, பால்/எண், இடம் ஆகிய அடிப்படைகளில் இயைபு இருக்க வேண்டும்" (க. திலகவதி, 1995. 60) என்று கூறுகிறார்.

ஆயினும், பெயர்ச் சொற்களின் இலக்கணத்தைச் சுருக்கமாகப் பின்வருமாறு அலகிடலாம்:

| | | |
|---|---|---|
| திணை | : | உயர்திணை, அஃறிணை இருதிணைப் பொது |
| பால் | : | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால், உயர்பால் |
| எண் | : | ஒருமை – பன்மை |
| இடம் | : | தன்மை, முன்னிலை, படர்க்கை |

க. திலகவதி குறிப்பிடுவது போலவே தமிழ் அறிஞர்கள் அனைவரும் பெயர்ச்சொற்களின் இலக்கணங்கள் வெறுமனே சொல்லளவிலே வைத்து உணர இயலா என்று கருதுகின்றனர்.[6] இவற்றின் இயைபும் பண்பும் வாக்கியச் சூழலில் வைத்து உணரத்தக்கவையாக அமைந்திருக்கும்.

பெயர்ச்சொற்களுக்கு இலக்கணம் கூறும்போது மரபிலக்கணம் திணைப் பகுப்பிற்கு அடுத்து பால் பகுப்பு முறைக்கும் சிறப்பளித்து விளக்குகிறது. ஐம்பால் பகுப்பில்[7] முதல் மூன்று பால் பகுப்பு ஒருமையைக் குறிப்பதற்கும் பின்னிரு பகுப்புகள் பன்மையைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டிருப்பதை உணரலாம். அவ்விரண்டில் முன்னது உயர்திணைப் பன்மைக்கும் பின்னது அஃறிணைப் பன்மைக் குறிப்பிற்கும் முறையாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பார்க்கும்போது இறுதியில் காணப்படும் இரண்டு பகுப்பு முறை மட்டுமே இந்தக் கட்டுரைக்குக் களங்களாக அமைவதைக் காணலாம்.

## 1.4 தமிழ் மொழியிலும் பிற மொழிகளிலும் பன்மை சுட்டுதல்

தமிழ் மரபிலக்கணத்தைப் பொறுத்த மட்டிலும் இப்பன்மைப் பகுப்புத் தன்மை சில விகுதிகளின் துணையோடு வெளிப்படுத்திக் காட்டப்படுகின்றன. அவையாவன:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பலர்பால் விகுதிகள் | – | எ.கா | பலவின் பால் விகுதிகள் | – | எ.கா |
| அர் | – | தோழியர் | அ | – | வந்தன |
| ஆர் | – | தேசத்தார் | வை | – | அவை |
| இர் | – | இளைஞர் | கள் | – | பெட்டிகள் |
| ர் | – | பிறர் | | | |
| மார் | – | தாய்மார் | | | |
| கள் | – | அண்ணன்கள் | | | |

இவற்றைச் சற்று ஆழ்ந்து நோக்கும்போது இவ்விகுதிகள் வகுக்கப்பட்டதற்கான வழிமுறையைக் காண வழியேற்படுகிறது. பலர்பாலுக்குரிய விதிகள் யாவும் உயர்திணைப் பெயர்ச்சொற்களோடு மட்டும் இணைந்து பன்மைத் தன்மையைக் காட்டுபவையாக அமைந்திருக்கின்றன. ஆனால், பலவின்பாலில் காணப்பெறும் பன்மை சுட்டும் விகுதிகளின் பயன்பாடும் வேறானவை. அஃறிணைப் பன்மையைக் குறிப்பதற்கு *அ* விகுதியும் உயர்திணை பன்மையைக் குறிக்க *அர்* விகுதியும் முற்றுவினைகளில்[8] இணைக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் வழக்கத்தை தொல்காப்பியக் காலம் முதற்கொண்டு காணலாம்.

| | | |
|---|---|---|
| அ | – வந்தன | – வினை முற்றுக்களில் மட்டும் வரும் |
| வை | – அவை | – பிரதிப் பெயராகவும் வினைமுற்றுக்களிலும் வரும் |
| கள் | – பெட்டிகள் | – அஃறிணைப் பெயர்களைக் குறிப்பிட மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. |

கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளில் *கள்* விகுதி மட்டும் இருதிணைகளுக்கும் பயன்படுத்தப்படுவதைக் காண முடிகிறது. அதனாலோ ஏனோ பயன்பாட்டில் பல குறைநிரைகளை உண்டுபண்ணிய வண்ணமாக உள்ளது.

இவ்வாறு பன்மையைச் சுட்டுவதற்கு எண்களின் எண்ணுப்பெயர்களும் விகுதிகளும் பயன்படுத்தப்படுவது இயல்பான வழக்கம். அவை பெயர் அல்லது வினைச் சொற்களோடு இணைந்து நின்று மொழி பயன்பாட்டில் தனது நிலையைத் தெளிவு செய்யும் இயல்பை உடையது. இவ்வகை எண்ணுப்பெயர்களைப் பெரும்பாலும் பெயர்ச்சொற்களுக்கு முன்னர் இட்டெழுதும் வழக்கம்தான் அனைத்து மொழிகளிலும் கையாளப்படுகிறது.

எ.கா :

ஒரு மாடு
இரு மாடு / மாடுகள்

இத்தகைய பயன்பாட்டை இயல்மொழி மாந்தர் அனைவரும் பயன்முறையில் செயல்படுத்துவது கடினமான பயிற்சியாக இராது. ஆனால், பன்மைச் சொற்களைப் பெரும்பாலும் அஃறிணைப் பெயர்களோடு இணைக்கப்படும் போது, வேறு வழிமுறைகளைக் கையாளும் போதும், இன்றைய மொழிபயன்பாட்டில் சில இடையூறுகளை உண்டுபண்ணுவதோடு இலக்கணப் போலிகள் உருவாவதற்கு வழி வகுத்துள்ளது.

பன்மையைச் சுட்டும் பாங்கு சில மொழிகளில் எளிமையாக இழையோடிருக்க[9] இந்தோ ஆரிய மொழிகளிலும் திராவிட மொழிகளிலும் பன்மையைச் சுட்டும் முறைமை சற்றுக் கடினமானதாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது.[10]

சமஸ்கிருத மொழியில் ஒருமையைக் குறிக்க ஒருமை விகுதியும் இருமையைக் குறிக்க ஒருவகை விதியும் இரண்டிற்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் குறிக்க தனிப்பட்ட விகுதியையும் வழங்குவது வழக்கம். இந்தோ – ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த ஆங்கிலத்தில் இதன் பயன்பாடு சற்றுக் கடினமானதாக அமையப்பெற்றுள்ளது.

ஆங்கில மொழியைப் பொறுத்தமட்டிலும் ஒருமையும் பன்மையும் தெளிவாக விளங்கும்படி உணர்த்தப்படுகிறது. பெரும்பாலும் ***S*** என்ற விகுதியை இணைத்து இதன் வேறுபாடு காட்டப்படுகிறது. இவ்விகுதி இணைக்கப்படும் ஒலியன்களுக்கு ஏற்ப ***S*** அல்லது ***es*** என்று தருவிக்கப்படுகிறது. இதற்கப்பால் சில சொற்கள் ஒருமையையும் பன்மையையும் குறிப்பதற்கும் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டிற்கு, ஆங்கிலத்தில் Sheep என்பது ஒருமையாகவும் பன்மையாகவும் பயன்படுத்தப்படுகிறது. பண்டை ஆங்கிலத்தில் நெடிலோடமைந்த ஓரசைச் சொற்களும் பன்மை விகுதி (Singular) ஏற்காமல் வழங்கி வந்தன என்று மு.வ. குறிப்பிடுவார்.

ஒரு சில நாகரிகமற்ற மக்கள் பேசும் பல மொழிகளில் ஒருமை பன்மை வேறுபாடே காணப்படுவதில்லை. ஹிதாட்சா (Hidatsa) மொழியிலும் சொனேரியன் (Sonorian) மொழியிலும் ஒருமை பன்மை என்ற வேறுபாடு பெயர்ச்சொற்களில் காணப்படுவதில்லை (Soyce, 1960, 410). அதே போல குரூக் மொழியிலும் அஃறிணைப் பன்மை இல்லை. இஃது அம்மொழிகளின் எளிமையைக் குறிக்கிறது.

ஆனால், திராவிட மொழிகளின் அமைப்பில் சொற்களின் ஒருமை பன்மையைப் பொறுத்தவரையில் இந்தோ–ஐரோப்பிய மொழியமைப்பிற்கு மாறாகவும் சித்திய மொழி அமைப்பிற்கு ஒப்பாகவும் உள்ளது. அஃறிணை சொற்கள் மட்டும் ஆராய்ந்து பார்த்தால் திராவிட மொழிகளுக்கும் சித்திய மொழிகளுக்கும் ஒரு வேறுபாடும் இல்லை எனலாம். (மு. வரதராசன், 1996:13)

## 1.5 தமிழ் மொழியில் இரட்டை பன்மை வழக்கு

தமிழ் மொழியில் இரட்டை பன்மை வழக்கினை அதிகமாகக் காண முடியவில்லை என்றாலும் குறிப்பிட்ட சொற்களைப் பயன்படுத்தும் போது இக்குறைபாடு நிகழ்வதைக் காண முடிகிறது. பொதுவாகக் காணப்படும் முறையின்மையை ஐந்து வகைகளாகப் பிரித்துப் பார்க்க வழியுண்டு.

எ.கா: 5

1. அவன் மாடு வாங்கினான்.
அவன் பத்து மாடு வாங்கினான் – பால்பகா அஃறிணை குழப்பம்
அவன் பத்து மாடுகள் வாங்கினான்

2. அது ராமனது மாடு. – *பதிலீட்டுச் சொல்* மற்றும் *கள்* விகுதி
அவைகள் ராமனது மாடுகள் பயன்பாட்டில் குழப்பம்
அந்தப் பத்தும் ராமனது மாடுகள்.

3. ஒரு மாடு வந்தது – *கள் விகுதி* மற்றும் *வினைமுற்று*
பத்து மாடுகள் வந்தன (பன்மை) குழப்பம்
பத்து மாடு வந்தன.

4. தாய்மார்கள் வந்தார்கள்.
தந்தைமார்கள் வந்தனர். – மார் மற்றும் கள் விகுதி
தாய்மார்களும் தந்தைமார்களும் வந்தார்கள் பயன்பாட்டில் குழப்பம்

5. தேவன் வந்தான்.
தேவர் வந்தனர். – அர் மற்றும் கள் விகுதி
தேவர்கள் வந்தார்கள் பயன்பாட்டில் குழப்பம்
அவர் வந்தார்.
அவர்கள் வந்தார்கள்.

பயன்பாட்டில் ஏற்படும் இவ்வகையான குழப்பங்கள் சில வேளைகளில் இலக்கண விதிகளை மீறிப் படைக்கப்பட்டவையாகவும் அமைத்திருக்கின்றன. ஆனால் அவை இந்தக் காலத்திலும் இலக்கண வழுவுடைய அமைப்பாகக் கருதப்படாது எழுதப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட குழப்பங்களைப் பின்வரும் அமைப்புகளில் வைத்துச் சிந்தித்துப் பார்க்கலாம்.

1.5.1 மார் விகுதியும் கள் விகுதியும்
1.5.2 அவை பிரதிப்பொருள் கள் விகுதியும்
1.5.3 அவர் பிரதிப் பெயரும் கள் விகுதியும்
1.5.4 எண்ணுப் பெயர்களும் கள் விகுதியும்

## 1.5.1 மார் விகுதியும் கள் விகுதியும்

பண்டைத் தமிழிலில் மார்[11] விகுதியும் பன்மையைக் குறிக்கும் பயன்பட்ட விகுதியாகும். தேவிமார், தோழிமார், தாய்மார் என்று எழுதும் போது பலர்பாலைத் தான் குறிக்கிறது. ஆனால் இவற்றோடு கள் விகுதியைச் சேர்த்து தேவிமார்கள், தோழிமார்கள், தாய்மார்கள், தந்தைமார்கள் என்று எழுதும்போது பன்மைக்குப் பன்மையைச் சேர்த்து விடுகின்றோம். இவை பொருண்மை அளவில் வழுவான வாக்கியங்களாக அமைந்து விடுகின்றன.

## 1.5.2 அவை பிரதிப்பெயரும் கள் விகுதியும்

*அது* என்பதன் ஒருமைக்கு அவை பன்மை பிரதிப் பெயராகப் பயன்பாட்டில் நிலைபெற்றிருக்கிறது. ஆகவே, அவை என்பதே பன்மையைக் குறிக்கும். அவை என்பதனோடு *கள்* விகுதி இணைக்கப்படும்போது இரட்டைப் பன்மைத் தன்மையை உருவாக்கி விடுகிறது. இதனை விகுதிமேல் விகுதியை இணைப்பதற்கு இணையாகும் என்பார் ராஜ. கோபாலச்சாரியார். (1991: 21)

### 1.5.3 அவர் பிரதிப்பெயரும் கள் விகுதியும்

பழந்தமிழில் அவர் பன்மைச் சுட்டாகப் பயன்பட்டது. அக்காலத்தில் அவர்கள் வழக்குச் சொல் பயன்பாட்டில் இல்லை. இன்றைய வழக்கில் அவர் ஒன்றன் பால் குறிப்பாகச் செயல்படுகிறது. பன்மைக் குறிப்புச் சொல் என்ற தகுதியை இழந்து விட்டது. மாறாக, அவர்கள் என்ற வழக்கு, பயன்பாட்டில் தகுந்ததொரு இடத்தைப் பெற்று விட்டிருக்கிறது (பொற்கோ, 1995: 27)

### 1.5.4 எண்ணுப் பெயர்களும் கள் விகுதியும்

எண்ணுப் பெயர்களில் *து* விகுதி பெறாத ஒன்றன் பால் பெயர்களும் உண்டு. இரண்டு, மூன்று, நூறு, ஆயிரம் முதலியன ஒன்றல்லாத எண்ணுப் பெயர்கள். ஆதலால் பலவின் பெயர்கள், அவை பன்மையைக் குறித்து நிற்பவை. இவற்றோடு *கள்* விகுதி இணைக்கப்படும்போது, பன்மைக்குப் பன்மை இணைக்கப்படுகிறது. ஆகவே, பால்பகா அஃறிணைப் பெயர்களில் *கள்* விகுதி இட்டு எழுதப்படுவதில்லை.

ஒரு தேங்காய்
நூறு தேங்காய்

தேங்காய் என்ற சொல் ஒன்றாயினும் நூறாயினும் ஒரே வடிவம் உடையதாய் இருப்பதால் அது ஒன்பால் என்றும் பலவின் பால் என்றும் கொளாது நிற்கிறது. எனவே அது பால்பகா அஃறிணை ஆயிற்று.

அஃறிணைச் சொற்களைப் பால்பகா அஃறிணைப் பெயர் என்பர் இலக்கண நூலார், ஏனைய திராவிட மொழிகளைவிட தமிழிலேயே இந்நிலை இன்றும் மாறாமல் விளங்குகிறது.

எருது வந்தது (ஒருமை)
எருது வந்தன ( பன்மை)

பன்மையைத் தெளிவாக்கும் இரண்டு முதலிய எண்களை முன்னர்ச் சேர்த்துக் கூறும்போதும் அப்பெயர்ச் சொல் திரியாமல் நிற்றல் வேண்டும் என்கிறார்.

ஒரு எருது (ஒருமை)
10 எருது (பன்மை)

இவ்வாறு 10 எருது என்று வழங்குதலே மொழி அமைப்பிற்கும் உகந்ததென அறிஞர்கள் கருதுகின்றனர்.

என்னிடம் 10 காசுகள் உள்ளன.

10 முன்னதாக எத்தனை காசு என்ற சொல்லிற்கு விடை கூறுவது போல 10 என்ற எண்ணிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. காசு என்ற சொல்லைக் காசுகள் என்று பன்மைபடுத்தாமல் எழுதலாம். அது மரபாம். பால்பகா என்ற ஒன்றன்பால், பலவின் பால் எனப் (பகா = பகுக்காதப்படி) பகுத்துக் காட்டமல் எழுதலாம்.[12]

### 1.6 இரட்டைப் பன்மைக் குழப்பமும் கள் விகுதியும்

திராவிட மொழிகளின் மற்றொரு சிறப்பியல்பாவது உயர்திணைப் பன்மை உணர்த்தும் விதியும் வழங்குவது இல்லை. சில இடங்களில் மாறி வழங்குவதும் உண்டு. அது வழா நிலையன்று. சிறுபான்மை வழுவமைதியாயும் பெரும்பான்மை வழுவாயும் கொள்ளப்படும்.

நரியார் – அஃறிணை ( உயர்திணை பன்மை – ஆர்)
மக்கள் – உயர்திணை ( அஃறிணை பன்மை விகுதி) – கள் – பெற்றது)

இதன் காரணமாக *ஆர் / கள்* பன்மை விகுதிகள் திணை – பால்களையும் உடன் உணர்த்தி நிற்கின்றன. தொடக்கக் காலத்தில் கள் விகுதி அஃறிணையில் இடம் பெற்று நாளடைவில் பெருவழக்காகி, இன்று உயர்திணையிலும் இடம் பெற்று நிற்கின்றது. காலவோட்டத்தின் மாற்றம் தான் மக்கள் / அரசர்கள் முதலிய சொற்களை வழாநிலை போல வழங்கலாயின என்று மு. வரதராசனார் கூறுவார் (1960 – 133–144).

12. 50 சட்டைகள் வாங்கினேன் (இது சரி)
50 சட்டை வாங்கினேன் (இது மிகச் சரி)

அஃறிணைக்கு மட்டுமே இவ்விதி பொருந்தும். எனினும் இந்த வழக்கு இன்று வழக்கொழிந்து கொண்டிருக்கிறது என்கிறார், கா. கலியபெருமாள்(1987:33)

50 காசு
50 காசுகள்

ஆகிய இரு வடிவங்களும் பயன்பாட்டில் நிலைப்பெற்றுள்ளன, இவ்விரு வடிவங்களும் பிழையின்றிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று க. திலகவதி கூறுகின்றார், (1995:63)

தமிழ் மொழியைப் பொறுத்தமட்டிலும் அஃறிணைப் பெயர்ச்சொற்கள் எல்லாம் பன்மை உணர்த்தும் *கள்* விகுதி இல்லாமல் வழங்குகின்றன. சில இடங்களில் அஃறிணையில் பன்மையைக் குறிக்க *கள்* விகுதி சேர்த்துக் கொள்ளும் இடமும் உண்டு என்று தொல்காப்பியர் விதித்திருப்பதால் இஃது பண்டைய முறையில் இருவகையமைவிலும் இருந்திருப்பதைக் காண முடிகிறது. பின்வரும் நூற்பா இதற்குச் சான்றாகத் தெரிகிறது.

கள்ளொடு விசணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலவறி சொற்கே
(தொல்காப்பியர், நூற்பா 3807)

மரபிலக்கண நூல்களையடுத்து[13], அதே காலக்கட்டத்தில் பண்டைய நாட்களில் நாட்டுப்புற மக்கள் *கள்* விதி இல்லாமலே அஃறிணைச் சொற்களை வழங்குவதாலும் இவ்வுண்மை நன்கு புலனானது. இவர்களைப் போலவே புலவர்களும் *கள்* விகுதியைப் புறக்கணித்து வந்துள்ளனர். இவ்விரு கூட்டத்தினரும் ஒரு மொழியின் உண்மை நிலையினை அறிய உதவும் மிகச் சிறந்த தரவுகளாகச் செயல்படுகின்றனர்.

சங்க இலக்கியத்தில் *கள்* விகுதியின் பயன்பாடு மிகவும் குறைவு. அஃது அஃறிணையில் மட்டுமே வருகிறது. சங்கம் மருவிய காலத்தில் உயர்திணையுடன் வருவதும் இரட்டைப் பன்மைச் சொற்களாக வருவதும் குறிப்பிடத்தக்கது. இக்காலத் தமிழில் பெருமளவில் வருவது இவ்விரு காலப் பகுதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது என்பார் சக்திவேல் (1985: 22).

இன்றைய பயன்பாட்டில் உயர்திணைப் பெயர்ச்சொல் சொற்களில் மட்டும் இல்லாமல் பதிலீடுப் பெயர்களிலும் நீங்கள், நாங்கள், எங்கள், நீங்கள் இப்பண்பினைக் காணலாம். இது காலத்தால் ஏற்பட்ட மாற்றமாகும். பன்டைக் காலங்களில்

அவர் ஓர் அமைச்சர்.
அமைச்சர் வந்தனர்.

இவற்றினின்று பன்மையை வேறுபடுத்தும் பொருட்டுப் பிற்காலத்தில் *அர்* விகுதியோடு *கள்* விகுதியும் சேர்த்து வழங்கலாயிற்று. இதன் அடிப்படையிலேயே அவர்கள், அரசர்கள் முதலான சொற்கள் எழுந்தன. ஆனால் இன்று பலர்பால் விகுதி – அர் – உயர்ச்சொல் கிளவியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

எ.கா
அவர் தலைவர்

சில வேளைகளில் பலர் பால் விகுதி *அர், கள்* விகுதியோடு சேர்ந்து பன்மையை உணர்த்துகிறது. இவை சில இடங்களில் உயர்திணை ஒருமையையும் உயர்ச்சொல் கிளவியாக உணர்த்தல் உண்டு.

எ.கா.
தலைவர் அவர்கள்

பொதுவாக, வாக்கியத்தில் உள்ள கருத்து நோக்கியே ஒரு பெயர்ச்சொல் ஒருமை அல்லது பன்மை என்று உணரப்பட்டுத் தெளிவுறுத்தக் கருதும்போது. அதனோடு பன்மை உணர்த்தும் தனிச் சொல் ஒன்று சேர்க்கப்படும். பேச்சுத் தமிழில் அஃறிணைப் பெயர்ச் சொற்களைப் போலவே அஃறிணை வினைச் சொற்களும் ஒருமை பன்மை, உணர்த்தாமல் நிற்கின்றன.

இவ்வாறு பயன்பாட்டில் நெடுங்காலம் வழாநிலைகளாகப் பயன்பட்டு வந்தவை பிற்காலத்தில் புதுமரபு என்னும் கோட்பாட்டிற்குள் தன்னை உட்படுத்திக் கொண்டு புதியதொரு பரிணாமத்தைப் பெற்றுக் கொள்கின்றன. அவ்வகையில் *அர்* விகுதி இன்றைய மொழியில் அறிஞர்களால் உயர்பால்[14] விகுதியாக அழைக்கப்படுவதைக் காண முடிகிறது.

எனினும், இன்றைய பயன்பாட்டில் *கள்* விகுதிகள் இதற்கும் அப்பாற்பட்ட செயல்பாட்டினைக் கொண்டிலங்குகின்றன. இவ்வாறு காலவோட்டத்தில் *கள்* விகுதி பெற்றிருக்கும் செயல் சிறப்பினையும் பொருண்மை மாறுபாட்டு நுணுக்கத்தையும் கொடுக்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டுகளைக் கொண்டு சற்றுக் கண்ணோட்டமிடுவோம்.

எ.கா.
கண்ணன் 50 காசு வைத்திருந்தான்
கண்ணன் 50 காசுகள் வைத்திருந்தான்
கண்ணன் பத்து 50 காசு/காசுகள் வைத்திருந்தான்

கொடுக்கப்பட்டிருக்கும் எல்லா எடுத்துக்காட்டுகளும் அமைப்பளவில் மாறுபட்டிருப்பதோடு மட்டுமல்லாமல் பொருண்மையிலும் சற்று மாறுபட்டிருப்பதனை ஆழ்ந்து நோக்கினால் விளங்கும்.

முதல் வாக்கியம் கண்ணன் 50 காசு வைத்திருந்ததைக் குறிக்கிறது. அது 50 என்னும் மதிப்பிற்கு முக்கியத்துவம் வழங்குவதை உணரலாம். இரண்டாவது வாக்கியம் *கள்* விகுதி இணைக்கப்பட்டு 50 காசுகள் என்று குறிப்பிடும் போது மறுபடியும் 50 காசு என்பதைத்தான் உணர்த்துகிறது. ஆனால், 50 காசுகள் என்னும் போது மறுமுனையில் அதன் 50 என்ற மதிப்பை மட்டும் குறிக்காது. ஒரு படி மேலே சென்று சிந்திக்கவும் தோன்றுகிறது. இதனை வாக்கியச் சுழலில் வைத்துப் பார்ப்போம்.

எ.கா:
கண்ணன் 50 காசு வைத்திருந்தான்

என்னும் வாக்கியத்தைப் பின்வருமாறும் பிரித்து பார்ப்போம்

1. கண்ணன் 1 பத்து காசும் 2 இருபது காசுமாக 50 காசு மதிப்புடைய 3 காசு வைத்திருந்தான்.
2. கண்ணன் 3 பத்து காசும் 2 இருபது காசுமாக 50 காசு மதிப்புடைய 3 காசுகள் வைத்திருந்தான்.

என்று குறிப்பிட்டுப் பார்த்தால் இரண்டாம் வாக்கியம் முறையான வாக்கியமாக அமைந்திருப்பதைக் காணலாம். ஆகவே, *கள்* விகுதி இணைக்கப்படுவது முறையாகாது என்னும் சிந்தனை அடிப்பட்டுப் போகிறது. ஏனெனில் இன்றைய சூழலில் பால்பகாச் சிந்தனையைக் கூட சூழலுக்கு ஏற்ப அமைய வேண்டும் என்பது அதிமுக்கியமான சிந்தனையாகும். அவ்விகுதியோடு இணைத்து உரைக்கும்போது அவ்வாக்கியத்தில் ஏதோ ஒரு குறைபாடு உள்ளது போல் உணர தோன்றுகிறது. அதே வேளையில் *கள்* விகுதியை விடுத்து எழுதும் போது, அது வழுவுடைய வாக்கியமாக அமைந்திருக்குமோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

மற்றுமொரு எடுத்துக்காட்டையும் பார்ப்போம்

எ.கா.
அந்தக் குளத்தில் 10 மீன்கள் இருந்தது.
அந்தக் குளத்தில் 10 மீன் இருந்தது.
அந்தக் குளத்தில் 10 மீன்கள் இருந்தன.

மேற்காணும் மூன்று வாக்கியங்களிலும் இடம்பெற்றிருக்கும் செயப்படுப்பொருள்கள் மாற்றம் கண்டிருப்பது போல் பொருள்

அளவிலும் மாற்றம் கொண்டிருக்கின்றன. முதலாவது வாக்கியம் அந்தக் குளத்தில் காணப்படும் மீன்களின் எண்ணிக்கை 10 என்பதை வலியுறுத்துகின்றது. ஆனால், வினைமுற்றில் ஒன்றன்பால் விகுதியான *து* பெற்றமையால் தவறான வாக்கியமாகக் கருதப்படுகிறது. தமிழ் இலக்கண கூற்றுப்படி பால்பகா அஃறிணை சிந்தணையின் அடிப்படையில் அவை ஒன்றன்பால், பலவின்பால், என்றும் பிரித்துக்கூற இயலா. ஆனால், இரண்டாவது எடுத்துக்காட்டைப் பார்க்கும்போது அந்தக் குளத்தில் காணப்பட்ட மீன்களின் எண்ணிக்கையை மட்டும் குறிப்பதாக ஏற்றுக் கொள்ளவும் இயலவில்லை. முதல் வாக்கியம் குளத்தின் மீன்களின் எண்ணிக்கை 10 என்கிறது. இரண்டாவது வாக்கியமோ அக்குளத்தில் காணப்பட்ட மீன் வகை 10 என்று கூறுகிறது. முதலாவது வாக்கியம் கள் விகுதி இல்லாது வாக்கியம் குளத்தில் முன் வகை 10 என்றும் மாறுபடுத்திக் கூறக் காணலாம். இத்தகைய நுண்ணிய பொருண்மை மாறுபாடு வாக்கியச் சுழலில் வைத்து உணரப்பட வேண்டிய ஒன்றாகும். இக்கருத்தின் நுண்மையை உணர்ந்ததாலோ ஏனோ தொல்காப்பியரும் *கள்* விகுதிக்கு முன்னுரிமை வழங்காது புறனடையில் ஒதுக்கி வைத்தார் போலும்.

எ.கா.
அந்தக் குளத்தில் 10 வகை மீன் இருந்தன.
அந்தக் குளத்தில் 10 வகை மீன்கள் இருந்தன

இவ்வாறு வகைகளுக்கு முன்னுரிமை வழங்கிக் குறிப்பிடும் போது *கள்* விகுதி தேவை இன்றியமையாததாகிறது. ஆகவே, மதிப்பைக் குறிப்பிடும் போது *கள்* விகுதியின் தேவை குறைவாகவும் எண்ணிக்கையையும் வகைப்பாட்டினைப் பற்றிக் குறிப்பிடும்போது இவ்விகுதியின் பயன்பாடு இன்றியமையாததாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறு குழப்பம் மிகுந்த சூழல்கள் பயன்பாட்டு நியதியைக் கருதி ஒரு முறைக்குட்படுத்தப்பட்டுள்ளதையே மேலே காணப்பட்ட எடுத்துக்காட்டுகள் விவரிக்கின்றன. இதனைப் பற்றிய முடிவுக்கு வருவதற்கு முன்னதாகப் பின்வரும் எடுத்துக்காட்டு ஒன்றனையும் பார்த்து விடுவோம்.

காலமும் நேரமும் மனித ஜனனம் தொடங்குவதற்கு முன்னதாகவே வாழ்வு பெற்றதாக உளவியல் தத்துவங்கள் பறைசாற்றும். இத்துணைப் பழமை வாய்ந்த இதனைக் குறித்திடாத உலக மொழிகளே இல்லை எனலாம். தமிழ் மொழியிலும் இச்சிந்தனை வேரூன்றி இருக்கிறது. காலங்காலமாக நிலைபெற்றிருக்கும் இதனில் நாம் பேசும் சிந்தனை எவ்வாறு பயன்பட்டு வருகிறது என்பதனைக் காண்போம். நேரம் என்பது மணி, நிமிடம் வினாடி என்று பிரித்துப் பார்க்கலாம். இவற்றோடு கள் சிந்தனை எவ்வாறு இணைக்கப்பட்டிருக்கிறது என்று பார்ப்போம்.

மணியைப் பொறுத்தமட்டிலும் அன்றும் சரி இன்றும் சரி *கள்* விகுதி பயன்படுத்தப்படாமலேயே கையாளப்படுகிறது. 1 மணி என்று கூறும் போது *கள்* விகுதி இணைக்கப்படுவதில்லை. மாறாக, 2 மணி, 3 மணி, 10 மணி என்று கூறும்போதும் அதே நிலைதான். ஆனால், மற்ற இரண்டு நிலைகளில் இதன் பயன்பாடு வேறு. அவற்றுள் இருவகைப் பயன்பாடும் கலந்து நிற்கிறன.

எ. கா:
10 நிமிடம்
10 நிமிடங்கள்

என்று கூறும் வழக்கமும் உண்டு. அதே போல,

10 வினாடி
10 வினாடிகள்

என்று கூறும் வழக்கமும் உண்டு. சற்று ஆழமாகப் பார்ப்போமானால், இம்மாறுபட்ட சிந்தனைகளுக்கு அடிப்படை என்ன என்பது புரியும்; மணி, நிமிடம், வினாடி இம்மூன்றனுள், பின்னிரண்டும் நேரத்தைத் துள்ளியமாக அளவிட பயன்படுத்தப்படுபவையாகும். இந்தச் சிந்தனை சமீபக் காலத்தில் பயன்பாட்டில் வந்ததாகும். ஆனால், மணி என்ற சிந்தனை காலங்காலமாக நமது மூதாதையரிடமிருந்து வழங்கப்பட்டு வந்துள்ளதை உணர முடிகிறது. இதன் அடிப்படையில் காணும் போது, தொடக்கக் காலந் தொட்டு எண்ணுப்பெயர்களோடு பெயர்ச்சொற்கள் இணையும் போது, *கள்* விகுதியைப் பெறுவதில்லை என்பதனை மறுவுறுதிப்படுத்துவதை உணரலாம் அன்றோ !

## 1.7 முடிவுரை

இத்தகைய குழப்பம் மிகுந்த நிலையில் எண்ணிக்கைகளைத் தொடரும் பெயர்ச்சொற்கள் *கள்* விகுதியை ஏற்க வேண்டுமா என்ற கேள்விக்கு முடிவு கூற இயலாத சூழல்தான் ஏற்படுகிறது. ஆயினும், இவ்விதி இணைக்கப்படுவதற்குத் தகுந்ததொரு காரணம் இருப்பதையும் கண்டோம். அதே வேளையில் பால்பகா அஃறிணை சிந்தனையின் அடிப்படையில் *கள்* விகுதி பெறாது எழுதப்படுவதும் ஏற்புடையதே. மு.வ. கலியபெருமாள், ராஜகோபாலச்சாரியர் போன்றோர் இக்கருத்தினை ஆதரிக்கின்றனர்.

இருப்பினும், இவ்வழக்கு இன்று சர்ச்சைக்குள்ளான ஒன்றாக நிற்கிறது. இதன் பயன்பாடு மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறது. இம்மாற்றம் இதன் பயன்பாட்டிற்குப் புதியதொரு தெம்பினை அளித்துள்ளது. அதன் அடிப்படையில் இதற்குப் புதியதொரு விதியை வகுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ச. அகஸ்தியலிங்கம் , பொற்கோ, க. திலகவதி போன்றோர் இந்த மாற்றத்தை வரவேற்பவர்களாக இருக்கின்றனர். இஃது காலத்திற்கேற்ற வரவாகவும் மொழிக்கு நன்மை செய்யும் பரிந்துரையாகவும் அமைகின்றது.

ஆயினும், இத்துறையைப் பொறுத்தமட்டிலும் தற்காலத்தில் கல்விமான்களின் ஆய்வும் ஆர்வமும் எவ்வாறு அமைந்திருப்பினும், குழப்பம் நிறைந்த இச்சூழலைத் தெளிவுபடுத்திட துள்ளியமானதொரு ஆய்வு இத்துறைக்கு மிக மிக அவசியமாக தேவைப்படுகிறது என்பது மட்டும் மறுக்க முடியாது என்பது திண்ணம்.

## துணை நூற்பட்டியல்

க. திலகவதி. *எழுத்தியலும் மொழியியலும் ( மாறிவரும் இலக்கணம்)*, ஜெயப்பக்தி நிலையம், கோலாலம்பூர், 1995

கா. கலியபெருமாள், ( *அடிப்படைத் தமிழ்)*, கிருஷ்ண புத்தகாலயம், கோலாலம்பூர், 1987

ச.சக்திவேல், *(தமிழ்மொழி வரலாறு)*, மணிவாசகர் நிலையம், சிதம்பரம், 1986

செ. வை . சண்முகம், *(இக்காலத் தமிழ்)*, பாரி நிலையம், சென்னை, 1985

சின்னசாமி, *(நன்னூல் தெளிவுரையும் பிழையின்றித் தமிழ் எழுதுதலும்)*, சென்னை,

சரசு பதிப்பகம், 1996

தொல்காப்பியம், *(சொல்லியல்)*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1996

தொல்காப்பியம், *(எழுத்தியல்)*, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி. 1996

பொற்கோ, *(தமிழ் இலக்கணக் கோட்பாடு)*, தமிழ் நூலகம், சென்னை, 1989

பொற்கோ, *(இலக்கண உலகில் புதிய பார்வை)*, பூம்பொழில் வெளியீடு, சென்னை, 1996

மு. வரதராசன். *(மொழிநூல்)*, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். திருநெல்வேலி, 1996

1 நன்னூல் சூத்திரம் 462

2 அதனால்தான் பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்படும் சொற்கள் யாவும் பெயர்ச் சொற்களாகவே அமைந்துள்ள என்று காரணம் கூறுவர்.

3 எல்லாச் சொல்லும் என்று குறிப்பிட்டது. பெயர், வினை, இடை உரி ஆகிய நான்கு வகுப்புச் சொற்களையும் குறிக்கும் (தொல்காப்பியம், சொல்லதிகாரம் நூற்பா 155)

4 சொல்லெனப் படுப பெயரரே வினையென்(று)
ஆயிரன் டென்ப அறிந்திசி னோரே
– தொல்காப்பியம், சொல்லதிகாரம் – நூற்பா 157

5 பெயரின் வகைமைகளைப் பற்றிக் கூறும்போது தொல்காப்பியம் உயர்திணை, அஃறிணை என்றும் இரண்டாக வகுக்கின்றது. இப்பகுப்பினை ஏற்றாலும் நன்னனூல் 275, இடுகுறி, காரணம், மரபு ஆக்கம் என்று பரந்த நிலைகளிலும் வகுக்கின்றது, (செ.வை. சண்முகம், 1986: 83)

6 தொல்காப்பியரிடமிருந்து இந்தக் கருத்துத் தொடங்குவதைக் கண்கூடாகப் பார்க்க முடிந்தாலும் இன்று மூவாயிரம் ஆண்டுகளக்குப் பின்னரும் இந்தக் கருத்திற்கு மாற்றுக் கருத்துக் கொள்ளாது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வியைபு காக்கப்பட்வில்லையானால் அவ்வாக்கியம் வழவமைதி கொண்ட வாக்கியமாகக் கருதப்படுகின்றது.

7 ஐம்பால் பகுப்பு: ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால், பலர்பால், பலவின்பால், எனப்படுபவையாகும்

8 எழுவாயில் நிற்கும் பெயர்ச் சொல்லுக்கும் பயனிலையில் நிற்கும் வினைமுற்றுக்கும் இயைபு இருக்க வேண்டும் அவ்வியைபு காக்கப்படவில்லையானால் அவ்வாக்கியம் வழுவான வாக்கியமாகக் கருதப்படும் என்கிறது தொல்காப்பியம். கோடிடப்பட்டுள்ள சொற்றொடர்கள் அடைந்திருக்கும் மாற்றங்களைக் கவனியுங்கள், ஒவ்வொரு வகைச் சொல்லுக்கும் ஒவ்வொரு பொருளைக் கொடுக்கிறது.

9. ஈபான், மலாய் போன்ற போலினேசிய மொழிகளில் இத்தன்மை எளிமையாக அமைந்திருக்கிறது.

எ.கா மலாய் மொழி

Saya membeli seekor Lembu
நான் ஒரு மாடு வாங்கினேன்

Saya membeli dua ekor lembu
நான் இரண்டு மாடு வாங்கினேன்

10. ஆங்கிலம்

1. He bought a Pair of shoes
அவன் ஒரு ஜோடி காலணி வாங்கினேன்

2. He bought two Pair of shoes
அவன் இரு ஜோடி காலணிகள் வாங்கினான்

3. He bought two two pair of shoes
அவன் இரு ஜோடி காலணிகள் வாங்கினான்

11. பலர்பால் விகுதி அர்கள். ஆர்கள், மார் நன்னூல் 30 வது நூற்பா குறிப்பை வழங்குகிறது. இஃது நிகழ்கால வழக்காகும். இவ்வழக்கினை சங்க இலக்கியங்களில் மிக குறைவாகவே இடம்பெற்றிருக்கிறது. 4000 திவ்விய பிரபந்தத்தில் 25 இடங்களில் மட்டும் இருக்கின்றது. இதற்குப் பிந்திய கால நூலான வில்லிபாரதத்தில் 1660 இடங்களில் இவ்வகைப் பயன்பாடு இடம் பெற்றுள்ளது.

12. 50 காசு

50 காசுகள்

ஆகிய இரு வடிவங்களும் பயன்பாட்டில் நிலைப்பெற்றுள்ளன. இவ்விரு வடிவங்களும் பிழையின்றிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று க.திலகவதி கூறுகின்றார் (1995: 63)

13 அஃறிணைப் பெயர்களைக் கூறும் போது ஒன்று என்ற எண்ணுப் பெயரையும் நன்னூல் இணைத்துக் கொள்கின்றது பலர்பாலுக்குக் கள் விகுதியையும் நேமிநாதம் (36), நன்னூல் (278) சேர்க்கின்றன

14 காண்க (க. திலகவதி, 1995: 68) (பொற்கோ, 1989: 47)